# அவுஸ்திரேலியா

# வளர்நிலை 4

அரை ஆண்டுப் பரீட்சை
2005

சுட்டெண் **(Index) :**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

1. பின்வரும் கதையை வாசித்த பின் கேள்விகளுக்குப் பதில் எழுதுக. (2x5=10)

முன்னொரு காலத்தில் ஒருசிறுமி இருந்தாள். அவள் ஒரு நாள் தன் பாட்டியைப் பார்க்கக் காட்டுவழியே சென்றாள். அவள் கையில் ஒரு பை இருந்தது. அந்த பை நிறைய உணவுப் பண்டங்கள் இருந்தன. அச்சிறுமிக்கு பாட்டி மேல் அளவற்ற அன்பு. பாட்டிக்கு ஒரு பையில் உணவுப் பண்டங்களை எடுத்துச் சென்றாள். இதை அங்குள்ள நரி ஒன்று அறிந்து கொண்டது. நரி அந்த உணவைப் பறித்துச் சாப்பிட எண்ணியது. அது பாட்டியாக நடித்து சிறுமியை ஏமாற்ற நினைத்தது. பாட்டியை ஏமாற்றி வேறு இடத்துக்கு அனுப்பிவிட்டு பாட்டி படுக்கும் கட்டிலில் படுத்துக் கொண்டது. துணியால் முகத்தையும் உடலையும் போர்த்திக்கொணடு படுத்துக் கொண்டது. சிறுமி பாட்டி படுத்திருந்த கட்டில் அருகே சென்று தொட்டுப் பார்த்தாள். அதன் உடம்பும் கையும் சொரசொரப்பாக இருந்தன. சிறுமி துணியை விலக்கிப் பார்த்தாள். நரியைக் கண்டதும் சத்தம் போட்டாள். அயலவர்கள் ஓடிவந்து நரியை ஓட ஓட விரட்டினார்கள்.

காட்டு வழியே சென்று கொண்டிருந்தது யார்?

---

சிறுமி யாரைப் பார்க்கப் போனாள்?

---

அவள் பைக்குள் என்ன இருந்தது?

---

நரி என்ன நினைத்தது?

---

நரிப்பாட்டியின் உடம்பும் கையும் எப்படி இருந்தன?

---

(2x5=10)

2. மாறிக்கிடக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி சரியான வாக்கியமாக்குக. (2x5=10)

பந்து - மாறன் - விளையாடினான் - அடித்து

---

சென்றோம் - சுற்றுலா - நாங்கள் - இத்தாலிக்குச்

---

இருக்கிறார் - கனடாவில் - என் - மாமா.

---

ஆடிய - நளினி - இருந்தது - நன்றாக - நடனம்.

---

பெண் - ஒரு - புலவர் - ஔவையார்

---

3. **சரியான வாக்கியங்களாகப் பொருத்துக.** (1x10=10)

| | |
|---|---|
| அவன் தன் நண்பனை | - வருகிறாய் |
| நீ எங்கிருந்து | - கிடைக்கின்றன |
| கிளி கூண்டில் | - போய் சந்தித்தான் |
| நல்ல நூல்கள் | - இருக்கிறது |
| அவர்கள் இருவரும் | - பால் ஊட்டினாள் |
| பல மாணவர்கள் | - நடந்து சென்றார்கள் |
| பட்டம் உயர உயர | - விளையாடினார்கள் |
| ஆமை மெதுவாக | - பறந்தது |
| தன் குழந்தைக்குப் | - ஊர்ந்து சென்றது |

4. **சரியான சொல்லின் கீழ் கீறிடுக.** (1x10=10)

(அவர்கள் , அவன்) குளிர்பானம் அருந்தினார்கள்.

(நான் , நாங்கள் ) நல்ல மாணவர்களாக வரவேண்டும்.

(அவர் , அவர்கள்) தான் எங்கள் பெற்றோர்.

(அவள் , அவர்கள்) கடைக்குப் போகிறாள்.

(இது , இவை ) என் புத்தகங்கள்.

(அது , அவை ) கீழே விழுந்தன.

(நாங்கள் , நான் ) பந்து விளையாடினேன்.

(அவர்கள் , அவன்) பாடசாலைக்குச் சென்றார்கள்.

(நான் , நாங்கள் ) பாட்டுப் பாடுகிறேன்.

உன் தங்கை பொம்மையை உடைத்து (விட்டாள், விட்டான்)

5. **உடலுக்கு சக்தியும், வளர்ச்சியும் தந்து, நோயிலிருந்து பாதுகாக்கும் உணவு வகைகள் கீழே தரப்பட்டுள்ளன. உருளைக்கிழங்கு ,சோளம், ரொட்டி, தானியவகை, முட்டை, பால் , இறைச்சி, மீன், கீரை, காய்கறிகள், பழங்கள்** (10)

உடலுக்கு சக்தி தரும் உணவு 3 தருக.

---

உடல் வளர்ச்சிக்கு தேவையான உணவுகள் 4 தருக.

---

நோயிலிருந்து உடலைப் பாதுகாக்கும் உணவுகள் 3 தருக.

---

6. **எதிரான சொற்களை வைத்து வசனத்தை மாற்றி அமைக்க.** (2x5=10)

அவன் மரத்தின் **மேலே** இருந்தான்.

---

அந்த உடை **வெண்மையானது**.

---

அவன் வியாபாரத்தை **இலாபத்தில்** நடாத்தினான்.

---

இருவரும் **சண்டை** பிடித்துக் கொண்டனர்.

---

அந்த நாய்க்குட்டி நேற்று **இறந்தது**.

---

7. **பின்வரும் வாக்கியங்களுக்கு ஏற்ற கேள்வி எழுதுக** (2x5=10)

மலையிலிருந்து ஆறு ஓடி வருகிறது.

---

வானத்திலிருந்து மழை பெய்கிறது.

---

செல்வி பாடசாலையிலிருந்து வருகிறாள்.

---

வீணையிலிருந்து நாதம் வருகிறது.

---

சிறுவனின் பெயர் கண்ணன்.

---

8. உமது நாட்டில் அன்னையர் தினம் கொண்டாடப்படுகிறது. உமது தாயாருக்கு ஒரு அன்னையர் தின வாழ்த்து அட்டை தயார் செய்ய விரும்புகிறீர். அதனை எப்படித் தயாரிப்பீர் என எழுதி காட்டுக. (10)

9. பின்வரும் வசனங்கள் வரிசை மாறி இருக்கின்றன. அவற்றை ஒழுங்காக வரிசைப்படுத்தவும்.

1. அப்பா அழகான காட்சிகளைப் படம் எடுத்தார்.
2. புகைவண்டி மிகவும் வேகமாகச் சென்றது.
3. நானும் தம்பியும் சன்னல் அருகே அமர்ந்தோம்.
4. நாங்கள் சிட்னிக்கு புகைவண்டியில் சென்றோம்.
5. வெளியே தெரிந்த காட்சிகளைப் பார்த்து மகிழ்ந்தோம்.

10. பின்வரும் கதையை வாசித்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க. (10)

ஒருநான் ராணி தன் தாயாருடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றார். தொலைபேசி மணி பலமுறை ஒலித்தது. அவருடைய தாயார் அதனை எடுக்கவில்லை. அவள் தன் நண்பி செல்வியைத் தொடர்பு கொண்டாள். அவளிடம் □தாயார் தொலைபேசியை எடுக்கவில்லை. என்ன நடந்தது என்று தெரியவில்லை. தயவுசெய்து போய் பார்த்து விட்டு வர முடியுமா?□ என்று கேட்டார். செல்வியும் உடனே ராணியின் தாயாரைப் பார்க்கச் சென்றார். அவரின் வீட்டுக் கதவு பூட்டப்பட்டு இருந்தது. கம்பிக்கதவுகள் என்ற படியால் உள்ளே எட்டிப் பார்த்தார். ராணியின் தாயார் கீழே விழுந்து கிடந்தார்.